# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,சிவகங்கை.

சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் தேவகோட்டை, காரைக்குடி, திருப்பத்தூர், சிங்கம்புணரி, மானாமதுரை, திருப்புவனம் மற்றும் இளையான்குடி வட்ட சட்டப்பணிகள் குழுவில், சமூக சேவைமனப்பான்மையுடன், ஊதியமின்றி பணிபுரிய தயார் செய்யப்படும் சட்டப்பணிகள் தன்னார்வலர்கள் 2024-2025 பட்டியலில், தகுதிவாய்ந்த நபர்களை தேர்வு செய்வதற்கான அறிவிக்கை: (Notification)

வெளியிடுபவர்:

தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
சிவகங்கை.

நாள் :10-05-2024

கிழமை :வெள்ளிக்கிழமை

மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சிவகங்கை மற்றும் தேவகோட்டை, காரைக்குடி, திருப்பத்தூர், சிங்கம்புணரி, மானாமதுரை, திருப்புவனம் மற்றும் இளையான்குடி ஆகிய இடங்களில் இயங்கி வரும் மேலே கண்ட அலுவலகங்களில் தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் திட்டங்களை செயல்முறைப்படுத்த தயார் செய்யப்படும் 2024-2025 ஆண்டுக்குரிய சட்டப்பணிகள் தன்னார்வலர்கள் பட்டியலில் சேர்க்கப்பட தகுதி வாய்ந்த நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பங்களை இணையதள முகவரி https://district.ecounts.gov.in/Sivagangai என்ற முகவரியில் பதிவிறக்கம் செய்து உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பதாரர்களின் தகுதிகள்:**

1. சிவகங்கை மாவட்டத்தில் குடியிருந்து வருபவராக இருக்க வேண்டும்.
2. குறைந்தபட்சம் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
3. நொடிப்பு நிலையராக முடிவு காணப்பட்டவராக இருத்தல் கூடாது.
4. ஏதாவது ஒரு குற்றத்திற்காக விசாரணையை எதிர்கொள்பவராக இருத்தல் கூடாது.
5. 30.04.2024 அன்று 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.

கீழே சொல்லப்பட்ட நபர்களும் விண்ணப்பிக்கலாம்.

1. ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உள்பட)
2. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்.
3. சமூக நலம் பற்றி கல்விபயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்.
4. அங்கன்வாடிப் பணியாளர்கள்.
5. மருத்துவர்கள்
6. சட்டக்கல்லூரி மாணவர்கள் (வழக்கறிஞர்களாக பதிவு செய்யும் வரை மட்டும்)
7. அரசியல்சாராத தன்னார்வத் தொண்டு நிறுவனங்ள் மற்றும் கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள்.
8. மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள்.
9. நன்னடத்தையுள்ள தண்டனை பெற்ற சிறைவாசிகள்.
10. ஓட்டுனர் உரிமம் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
11. ஏற்கனவே சட்டப்பணிகள் தன்னார்வலர் பட்டியலில் உள்ள நபர்கள்.

முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 24.05.2024.பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.

முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி:

**தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,**
**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,**
**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அலுவலகம்,**
**சிவகங்கை-630561.**

Sd/-

தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
சிவகங்கை.

வரிசை எண்: [ ]

# சட்டப்பணிகள் தன்னார்வலர்கள் (Para Legal Volunteers) 2024-2025-ம் ஆண்டு சேர்க்கைக்கான விண்ணப்ப படிவம்:

சமீபத்திய பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம்.

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர்-
   தமிழில்: :
   ஆங்கிலத்தில்: :
2. விண்ணப்பதாரரின் வயது: (31.04.2024 முடிவடைந்த தேதியில்) :
3. விண்ணப்பதாரரின் பாலினம்: (ஆண்/பெண்) :
4. விண்ணப்பதாரரின் கல்வித்தகுதி: :
5. விண்ணப்பதாரரின் மதம்/இனம் :
6. விண்ணப்பதாரரின் முந்தைய/தற்போதைய பணிவிவரம்: :
7. விண்ணப்பதாரரின் பிற தகுதிகள் மற்றும் சமூகசேவை ஈடுபாடுகள் தொடர்பான விபரங்கள்: :
8. விண்ணப்பதாரர் ஏற்கனவே சட்டப்பணிகள் தன்னார்வலராக பணிபுரிந்துள்ளாரா? :
9. விண்ணப்பதாரர் சிவகங்கை மாவட்டத்தை சொந்த ஊராக கொண்டுள்ளாரா? :
10 விண்ணப்பதாரர் சிவகங்கை மாவட்டத்தில் எந்த பகுதியில் பணிபுரிய விரும்புகிறார்? :
11 விண்ணப்பதாரரின் தகவல் தொடர்பு முகவரி:

12 விண்ணப்பதாரரின் கைபேசி எண்: :

13 விண்ணப்பதாரரின் கையொப்பம்: :

**உறுதிமொழி**

மேலே கூறப்பட்டுள்ள விண்ணப்படிவ விவரங்கள் அனைத்தும் படித்துப்பார்த்து உண்மையெனவும் அவற்றில் தவறுகள் இருப்பின், அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு கட்டுப்படுவேன் என்றும், இதன் மூலம் உறுதி கூறுகிறேன்.

இடம்:

தேதி: விண்ணப்பதாரரின் கையொப்பம்: